முருகப்பெருமான் துணை

**மகான் சிவயோக மாமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.02.2024,** திங்கட்கிழமை

1. சத்ய ஞானயுகங்கள் படைக்க
சற்குருவாய் வந்த அரங்கனே
சத்யனே சடாட்சரன் அவதாரமே
சாற்றிடுவேன் உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலைதிங்கள்
குறைவிலா இருபானீர்திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 22ம் நாள், 05.02.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க சிவயோகமாமுனிவர் யானும்
3. யானும் உலகோர் இன்பமுற
உயர் ஞானம்பெற உரைப்பேன்
ஞானமாக நம்பிக்கை பெருகி
நல்கதி மக்களெல்லாம் அடைய
4. அடைய அற்புதம் புரிகின்ற
ஆறுமுக அரங்க ஞானியே
தடையற நீஅருளும் சன்மார்க்க
தரும ஞான வழிமுறையே
5. வழிமுறையே உன் வழிவருகின்ற
வையக மாந்தர்கள் அனைவரின்
பழிபாவ பிறப்பு கர்மாவான
பாவ வினைகளதை விரட்டி
6. விரட்டி ஞானத்தெளிவூட்டி
விடாது தருமஞானமதை
வரமாக ஏற்றுத் தொடரவும்
வணங்கி நீயேகதியென வாழவும்
7. வாழவும் அருள்தயவு காட்டும்
வந்து உன்வழி இணைப்பாலே
காலமெல்லாம் நல்வழி தொடரவும்
கடமை தவறா உயர்நிலைகூட்டி

8. கூட்டியே அரங்கனே கலியில்
குருவில் சிறந்தோர் என
தட்டாமல் சரணடைவு கூட்டி
தவசி வழி நாமசெப பலம்

9. பலம் சேர்த்து வாழநேரும்
பரோபகாரம் வளரும் விதமாக
வலம்வந்து அரங்கன் தரும
வழிகள்தனை முன்மொழிந்து செய்து

10. செய்துமே தருமவான்களாக
சித்திகளும் நிறைந்தநல்
மெய்ஞானவான்களாக உயர்ந்து
முருகப் பெருமான் காட்சிதனை

11. காட்சிதனை கலியில் அடைந்து
கடைத்தேற்றம் பெற்றவர்களாக
ஆட்சிதனை ஞானவழி படைப்பர்
அருளிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—